வணக்கம்

ஆகாஷ்வாணி—புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 18.6.2024 நேரம் மாலை 6.10 மணி

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/18.6.2024/Script.

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாரணாசியில், 9.26 கோடி விவசாயிகளுக்கு, மொத்தம் 20 ஆயிரம் கோடி ரூபாய் பிஎம்-கிசான் நிதி விடுவிக்கிறார்

யோகா மற்றும் சிறுதானியங்கள் பற்றிய விழிப்புணர்வை, மக்கள் இயக்கமாகவே மாற்ற, கிராம பஞ்சாயத்து தலைவர்கள் பாடுபட வேண்டுமென, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

நடப்பு நிதியாண்டிற்கான புதுவை அரசின் முழு பட்ஜெட்டை, மாநில திட்டக் குழு, 12 ஆயிரத்து 700 கோடி ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

காரைக்கால் மாங்கனித் திருவிழாவை ஒட்டி, காரைக்கால் மாவட்டத்தில் வரும் 21-ஆம் தேதி உள்ளூர் பொது விடுமுறை விடப்படுகிறது.

மோடி-வாரணாசி

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாரணாசியில் நடைபெறும் விழாவில், பிஎம்-கிசான் திட்டத்தின் கீழ், 9.26 கோடி விவசாயிகளுக்கான 17-ஆவது தவணை உதவியாக, 20 ஆயிரம் கோடி ரூபாய் நேரடி ரொக்க மானியம் விடுவிக்கிறார். லட்சாதிபதி சகோதரிகளாகப் பெண்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பெற்ற, சுமார் 30 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, கிரிஷிசகி சான்றிதழ்களை, அவர் இந்நிகழ்ச்சியின் போது வழங்குகிறார். 3-ஆவது முறையாக பிரதமராக பதவி ஏற்றப் பின்னர் திரு நரேந்திர மோடி வாரணாசி செல்வது இதுவே முதல் முறை என்பதும், பிரதமராக பதவி ஏற்றவுடன், விவசாயிகளுக்கு 17-ஆவது தவணை கிசான் சம்மான் நிதி உதவி வழங்குவது பற்றிய கோப்பில் தான், திரு நரேந்திர மோடி முதல் கையெழுத்து போட்டதும் குறிப்பிடத் தக்கது.

மோடி-கடிதம்

யோகா மற்றும் சிறுதானியங்கள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதன் மூலம், முழுமையாக ஆரோக்கியம் என்பதை, மக்கள் தலைமையிலான ஒரு இயக்கமாகவே மாற்ற, கிராம பஞ்சாயத்து தலைவர்கள் பாடுபட வேண்டுமென பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இதுகுறித்து கிராம பஞ்சாயத்து தலைவர்களுக்கு அவர் எழுதி

உள்ள கடிதத்தில், பஞ்சாயத்து அமைப்புகள், பள்ளிகள், அங்கன்வாடிகள், சமூக சுகாதார மையங்கள் மற்றும் இதர இடங்களில் யோகா நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம், யோகா பற்றிய மக்களின் ஆர்வத்தை, குறிப்பாக இளைஞர்களின் ஆர்வத்தை தூண்ட வேண்டும் என்றும், இதனால் மக்களின் வாழ்க்கை, இறுக்கமற்ற, எளிய வாழ்க்கையாக மாறும் என்றும் தெரிவித்துள்ளார். கிராம பஞ்சாயத்து பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும், பிரதமர், சர்வதேச யோகா தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டுள்ளதார். உலக அளவில் யோகாவினால் ஏற்பட்டுள்ள தாக்கங்களுக்கு சான்றாகவே, சர்வதேச யோகா தினம் கொண்டாடப் படுவதாகவும், ஆரோக்கியமான இந்தியா ஒன்றை உருவாக்குவதற்கான அரசின் முயற்சிகள் இதனால் வலுப் பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் தொன்மையான கலாச்சாரத்தால் உலகிற்கு வழங்கப்பட்டுள்ள பரிசே யோகா என்றும் யோகா பயில்வதால் முழுமையான ஆரோக்யம் மற்றும் நலவாழ்வை பெறலாம் என்றும் பிரதமர் கூறி உள்ளார். உடலுக்கும் உள்ளத்திற்கும் யோகா எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு, ஸ்ரீஅன்னம் என்னும், சத்தான சிறுதானியங்களும் மிக முக்கியம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

*மன்-கி-பாத்*

வரும் 30-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாக உள்ள மன்-கி-பாத் நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பொது மக்கள் வழங்கலாம் என பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார். மை-கவ் இணையதளம் அல்லது நமோ-ஆப் மொபைல் செயலியை இதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம், அல்லது 1800-11-7800 என்ற இலவச தொலைபேசி எண் மூலம் குரல் பதிவு செய்து கொள்ளலாம் என்று, சமூக ஊடக பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். 3-ஆவது முறையாக பதவி ஏற்ற பின்னர் திரு நரேந்திர மோடி வழங்கும் இந்த முதலாவது மன் கி பாத் நிகழ்ச்சி, பிரதமரின் மொத்த மன் கி பாத் தொடரில், 111-ஆவது நிகழ்ச்சியாக அமைய உள்ளது.

*வளர்ச்சி*

உலக நாடுகளின் கடன் தீர்ப்புத் திறனை மதிப்பிடும் ஃபிட்ச் நிறுவனம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி பற்றிய கணிப்பு, 7.2 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது. இதுஇதுவரை, 7 சதவிகிதமாக இருந்தது. நடப்பு நிதியாண்டில் உலக அளவிலான பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்பீடும், 2.4-ல் இருந்து, 2.6 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மீட்சி குறித்து நம்பிக்கை அதிகரித்து இருப்பதும், சீனாவின்

ஏற்றுமதி துறையில் மந்த நிலை மாறி வருவதும் இதற்கு முக்கிய காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. சீனா இல்லாத இதர வளரும் நாடுகளில், உள்நாட்டு அளவிலான சந்தை தேவை அதிகரித்து வருவதும், ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு சாதகமாக இருக்கும் என்று ஃபிட்ச் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யோகா-மைசூர்

கர்நாடக ஆளுநர் திரு தாவர்சந்த் கெலாட், இன்று மைசூரில், தேசிய யோகா ஒலிம்பியாட் போட்டிகளை தொடக்கி வைத்தார். ஹர்கர் யோகா இயக்கத்தின் மூலம் நாட்டிலேயே யோகா ஞானம் அதிகம் உள்ள மாநிலமாக கர்நாடகத்தை மேம்படுத்த மாநில அரசு பாடுபட்டு வருவதாக அவர் தமது உரையில் தெரிவித்தார். தேசிய இளையோர் திருவிழாவின் ஒரு பகுதியாக கடந்த ஆண்டு ஜனவரியில் கர்நாடகத்தில் நடைபெற்ற பெருந்திரள் யோகா நிகழ்ச்சி உலக சாதனையாக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். இந்திய பாரம்பரிய சாத்திரங்களில் விவரிக்கப்படும் யோகா தற்போது உலக அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளதாகவும், இதனால் உலகில் யோகா குருவாகவே பாரதம் மேம்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இந்தியாவில் வளமான கலாச்சார மரபுகளை உலகிற்கு அறிமுகப் படுத்தியதே யோகா தான் என்று சுவாமி விவேகானந்தரை மேற்கோள் காட்டி, கர்நாடக ஆளுநர்

குறிப்பிட்டார். யோகா பயில்வதால் உடல், மனம், மற்றும், ஆன்மிக நலன் மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார். மைசூரில் தேசிய ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத் தக்கது.

மோடி-ஸ்ரீநகர்

வரும் 21-ஆம் தேதி ஸ்ரீநகரில் நடைபெற உள்ள 10-ஆவது சர்வதேச யோகா தின விழாவில், பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார். நமக்கும்-சமூகத்திற்குமான யோகா என்ற கருப்பொருள் அடிப்படையில் இவ்வாண்டு சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது. தனிநபர்களின் நலன்கள்-சமூகத்தின் நலன்கள் இரண்டையும் பேணுவதில் யோகா மிக முக்கிய பங்கு வகிப்பதை எடுத்துக் கூறும் வகையில் இக்கருப்பொருள் அமைந்திருப்பதாக மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப்ராவ் ஜாதவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். தனிநபர்களின் உடல், மனம், மற்றும் ஆன்மிக வளர்ச்சியுடன் ஒட்டு மொத்த சமூகத்தின் நல்லிணக்கத்தையும் யோகா மேம்படுத்துவதாக அவர் தெரிவித்தார். அண்மைக் காலங்களில் லட்சக் கணக்கிலான மக்கள், யோகா தின விழாவில் பங்கேற்று வருவதே, சமூகங்களின் மீதான யோகாவின் ஆழமான தாக்கத்திற்கு எடுத்துக் காட்டாகும் என்றும் அவர் கூறினார். பார்வை குறைபாடு உள்ளவர்களும்,

எளிதில் யோகா பயில ஏதுவாக, பிரெயில் முறையில் தயாரிக்கப்பட்டுள்ள, பொது யோகா பயிற்சி புத்தகத்தையும், குழந்தைகளுக்கான, யோகா பற்றிய பேராசிரியர் ஆயுஷ்மான் சித்திரக் கதை நூலையும், அமைச்சர் இன்று வெளியிட்டார். இவ்வாண்டு யோகா தினத்தை ஒட்டி விண்வெளிக்கான யோகா என்ற பெயரில் சிறப்பு முன்முயற்சி ஒன்றுக்கு, இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இதன்படி இஸ்ரோ விஞ்ஞானிகள் அனைவரும் ஒருங்கிணைந்து, பொது யோகா வழிமுறைகளின் படி, யோகா பயிற்சியில் ஈடுபட உள்ளனர். ககன்யான் திட்ட விஞ்ஞானிகளும் இதில் அடங்குவர். யோகா துறையில், தொழில் நுட்பங்களின் அடிப்படையிலான புதிய ஸ்டார்ட்-அப் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில், மத்திய ஆயுஷ் துறை அமைச்சகம், யோகா-டெக் சேலஞ்ச் என்ற பெயரில், மை-கவ் மற்றும் மை-பாரத் இணைய தளங்கள் மூலமாக, போட்டி ஒன்றையும் நடத்துகிறது.

*திரைப்பட விழா*

திரைப்பட கலை பயிலும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தங்களின் திறமைகளை திரைப்பட ரசிகர்கள் மற்றும் நிபுணர்களுக்கு திரையிட்டுக் காட்ட, சிறந்த வாய்ப்பு ஒன்றை, 18-ஆவது மும்பை சர்வதேச திரைப்பட விழா வழங்கி உள்ளது. இவ்வாண்டு 40-க்கும் மேற்பட்ட மாணவர் குறும்படங்கள் திரைப்பட விழாவில் இடம் பெறுகின்றன.

இந்திய திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பயிற்சி கல்லூரி, சத்தியஜித்ரே திரைப்பட பயிற்சி கல்லூரி, மற்றும், ஜெர்மனியின் கான்ராட் ஊல்ப் திரைப்படக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களின் படைப்புகளும் இதில் அடங்கும்.

திட்டக் குழு

புதுச்சேரி அரசு நடப்பு நிதியாண்டிற்கான முழு பட்ஜெட்டை அடுத்த மாதம் தாக்கல் செய்ய உள்ள நிலையில், மாநில திட்டக் குழுவின் கூட்டம், துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தலைமையில், தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்றது. முதலமைச்சர் திரு ரங்கசாமி, அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு லட்சுமி நாராயணன் திரு ஜெயக்குமார், திரு திருமுருகன், திரு சாய் சரவணன் குமார், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு சிவா, தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், பல்வேறு துறைகளுக்கான அரசுச் செயலர்கள்-இயக்குநர்கள் மற்றும் உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். நடப்பு நிதியாண்டின் பட்ஜெட்டிற்கு, 12 ஆயிரத்து 700 கோடி ரூபாய் இறுதி செய்யப் பட்டுள்ளதாக திட்டக் குழுக் கூட்டத்தின் முடிவில் துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். புதுச்சேரி அரசின் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், ரேஷன் கடைகளை திறக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து, தாய்மார்களின்

கருத்தை அறிந்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார். திட்டக் குழுவால் இறுதி செய்யப்பட்ட பட்ஜெட் தொகை குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றும் மத்திய அரசின் அனுமதி கிடைத்த உடன், நிதி துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு ரங்கசாமி முழு பட்ஜெட்டை சட்டமன்றத்தில் தாக்கல் செய்வார் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*மாங்கனி திருவிழா*

காரைக்காலில் புகழ்பெற்ற மாங்கனித் திருவிழா வரும் 21-ஆம் தேதி நடைபெற இருப்பதை ஒட்டி, அன்றைய தினம், காரைக்கால் மாவட்டத்தில் உள்ள பள்ளி-கல்லூரிகள் மற்றும் அலுவலகங்களுக்கு, உள்ளூர் பொது விடுமுறை அளிக்க, மாவட்ட ஆட்சியருக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி உத்தரவிட்டுள்ளார். முன்னதாக, காரைக்கால் பகுதியைச் சேர்ந்த அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன் இன்று முதலமைச்சரிடம், விடுமுறை குறித்து கோரிக்கை விடுத்தார்.

*புதுச்சேரி பல்கலை*

டைம்ஸ் உலக தர வரிசை பட்டியல், மற்றும், கியு.எஸ் உலக தரவரிசைப் பட்டியலில் புதுச்சேரி பல்கலைக் கழகம், தொடர்ந்து முன்னேறி வருகிறது. 106 நாடுகளைச் சேர்ந்த 5 ஆயிரத்து 663 உயர்கல்வி நிறுவனங்களை மதிப்பீடு செய்து கியு.எஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள,

2025-ஆம் ஆண்டிற்கான உலக தரவரிசைப் பட்டியலில், புதுச்சேரி பல்கலைக்கழகம், ஆயிரத்து 201-க்கும் ஆயிரத்து 400-க்கும் இடையிலான இடத்தை எட்டி உள்ளது. இந்தியாவில் இருந்து 46 உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமே இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இதில் ஒன்றாக புதுச்சேரி பல்கலைக்கழகம் திகழ்வதும் குறிப்பிடத் தக்கது. இதேபோல 120-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 152 பல்கலைக் கழகங்களை மதிப்பீடு செய்து டைம்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள, 2024-ஆம் ஆண்டிற்கான நிலைத் தன்மை தரவரிசை பட்டியலிலும், புதுச்சேரி பல்கலைக் கழகம், 801-க்கும், 820-க்கும் இடையிலான பிரிவில் இடம் பெற்றுள்ளது. 2025-ஆம் ஆண்டில் மேலும் முன்னேற முடியும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் பல்கலைக் கழகத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*மீனவர்-கைது*

நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த புதுக்கோட்டை மீனவர்கள் நால்வரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இவர்கள் மேல் விசாரணைக்காக காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர்.

வானிலை-தமிழ்நாடு

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால், இன்றும் நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 24-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும், 22-ஆம் தேதி, கோவை,நீலகிரி,திருப்பூர், தேனி,திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப் பகுதிகளில், ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மன்னார் வளைகுடா மற்றும் தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் அதிகபட்சம் 55 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை நகரின் சோளிங்கநல்லூர் மண்டலத்தில், 12 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

வானிலை

நாட்டின் கிழக்கு மற்றும் வடகிழக்கு பிராந்தியங்களில் வெப்ப அலை இன்று முதல் படிப்படியாக குறையும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. இமயமலை அடிவாரத்தை ஒட்டி உள்ள மேற்குவங்கப் பகுதிகள் மற்றும் வடகிழக்கு இந்தியாவில் அடுத்த 2, 3

நாட்களுக்கு கனமழை தொடரும் என்று வானிலை ஆய்வுத் துறை விஞ்ஞானி டாக்டர் சோமாசென் ராய் தெரிவித்துள்ளார்.

## தொழில் நுட்ப கிராமம்

அனைவருக்குமான டிஜிட்டல் வசதிகள் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் நோக்கத்துடன், புதுமையான தொழில் நுட்ப படைப்புகளை உருவாக்க மத்திய அரசு போட்டி ஒன்றை அறிவித்துள்ளது. 5-ஜி ஞானமுள்ள கிராமம் என்னும் தலைப்பிலான இப்போட்டியில் தொழில், தொழில் நுட்பம், கல்வி மற்றும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் பங்கேற்று, கல்வி, சுகாதாரம், வேளாண்மை மற்றும் இதர ஊரகத் துறைகளில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வரும் வகையிலான புதுமைப் படைப்புகளை சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுஅல்லாது, டிஜிட்டல் தகவல் தொடர்பு வசதிகளில் அதிநவீன குவாண்டம் தொழில் நுட்பம் மூலம் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மற்றொரு போட்டியும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## நெடுஞ்சாலை

டெல்லி தலைநகர பிரதேசம் மற்றும் அதனைச் சுற்றி உள்ளப் பகுதிகளில், தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள இடங்களில், மியாவாக்கி காடு வளர்ப்பு பணிகளை மேற்கொள்ள தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் திட்டமிட்டுள்ளது. இதற்கென 53 ஏக்கர்

நிலங்கள் இனம் காணப் பட்டுள்ளதாக புதுடெல்லியில் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நகர்புறங்களில் ஆங்காங்கே காலியாக உள்ள துண்டு நிலங்களில் அடர்ந்த காடுகளை எளிய முறையில் உருவாக்கி பசுமைப் பரப்பை அதிகரிக்க, ஜப்பானிய மியாவாக்கி முறை உலகெங்கிலும் பயன்படுத்தப் படுகிறது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாரணாசியில், 9.26 கோடி விவசாயிகளுக்கு, மொத்தம் 20 ஆயிரம் கோடி ரூபாய் பிஎம்-கிசான் நிதி விடுவிக்கிறார்

யோகா மற்றும் சிறுதானியங்கள் பற்றிய விழிப்புணர்வை, மக்கள் இயக்கமாகவே மாற்ற, கிராம பஞ்சாயத்து தலைவர்கள் பாடுபட வேண்டுமென, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

நடப்பு நிதியாண்டிற்கான புதுவை அரசின் முழு பட்ஜெட்டை, மாநில திட்டக் குழு, 12 ஆயிரத்து 700 கோடி ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

காரைக்கால் மாங்கனித் திருவிழாவை ஒட்டி, காரைக்கால் மாவட்டத்தில் வரும் 21-ஆம் தேதி உள்ளூர் பொது விடுமுறை விடப்படுகிறது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.